# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
## இணையவழியில் (Online) கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் செயன்முறை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கு மிகவும் இலகுவாக கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் இணையவழியில் (Online) விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான செயன்முறையொன்ற 2023.06.15 ஆம் திகதி முதல் அறிமுகம் செய்வதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

இந்தச் செயன்முறையின் கீழ் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு நாடு முழுவதிலும் 51 பிரதேச செயலகங்களிலுள்ள ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலையங்களில் கைவிரல் அடையாளங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதன் போது 60 வயதுக்கு மேற்பட்ட ஆட்கள் இந்த முறையின் கீழ் விண்ணப்பிக்கும் போது கைவிரல் அடையாளத்தை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதனால் அவர்களது விண்ணப்பத்துடன் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பது போதுமானது.

கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 நாட்களின் பின்னர் அஞ்சல் திணைக்களத்தின் கூரியர் சேவை மூலம் விண்ணப்பதாரிகளுக்கு "துரித சேவை" ஊடாகவும் 14 நாட்களில் சாதாரண சேவை மூலமும் கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும்.

சாதாரண சேவையின் கீழ் 14 நாட்களுக்குள் தபால் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும்.

**இணைய வழியில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் செயன்முறை**

- திணைக்களத்தின் இணையத்தளமான www.immigration.gov.lk இல் குறிப்பிடப்பட்டுள்ள "இணைய வழிமுறையில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்" எனும் இணைப்பில் பிரவேசித்து ஏற்புடைய தெரிவை மேற்கொள்ள முடியும்.
- தங்களது கையடக்க தொலைப்பேசி இலக்கத்தை உள்ளடக்கிய பின்னர் அதற்கு கிடைக்கப்பெறும ஒரு முறை மாத்திரம் பயன்படுத்த முடியுமான கடவுச்சொல்லை (OTP) உள்ளடக்குதல் வேண்டும்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஏற்புடைய தகவல்களை உட்படுத்தல் வேண்டும்.
- இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் மூலப் பிரதிகளை வருடி (Scan) எடுத்து அறிவுறுத்தல்களுக்கு அமைய இணைப்பில் உட்படுத்தல் வேண்டும்.
- தாங்கள் தெரிவுசெய்யும் கைவிரல் அடையாளம் வழங்கும் நிலையத்தில் உரிய நேரத்தில் கைவிரல் அடையாளத்தை வழங்கும் சந்தர்ப்பம் தாங்களுக்கு உண்டு. அது தொடர்பில் குறுஞ்செய்தியொன்றின் மூலம் தாங்களுக்கு உறுதிசெய்யப்படும்.
- அதற்கமைய, குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் உரிய பிரதேச செயலகத்தின் அடையாள அட்டைப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்ளும் நிலையத்தில் கைவிரல் அடையாளத்தை வழங்க முடியும். அதன் போது தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.
- தாங்கள் புகைப்படத்தை ஏற்கனவே எடுத்திருக்காத போது கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்ளும் பிரதேச செயலகத்தில் அதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.
- அவ்வாறு கைவிரல் அடையாளத்தை வழங்கிய பின்னர் அவசர சேவையின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு 03 நாட்களுக்குள் அஞ்சல் திணைக்களத்தின் கூரியர் சேவை மூலம் கட்டவுச்சீட்டு விண்ணப்பதாரியின் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்.
- தங்களிடம் செல்லுபடியான கடவுச்சீட்டு இருப்பின் கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களிடம் அந்தக் கடவுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தை தனிப்பட்ட ரீதியில் சமர்ப்பிப்பதில் தாங்களுக்கு ஏதேனும் அசௌகரியங்கள் இருப்பின் இந்தத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள புகைப்படசாலையொன்றின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கட்டணங்கள் அறவிடப்படும் முறை**

- அவசர சேவை - ரூ.15,000
  சாதாரண சேவை - ரூ.5,000
- கொடுப்பனவை வங்கி அட்டை மூலம் அல்லது இலங்கை வங்கயின் எந்தவொரு கிளையினூடாவும் செய்ய முடியும்.
- கொடுப்பனவு செய்யும் முறையாக வங்கியை தெரிவுசெய்யுமிடத்து அந்தத் தெரிவைக் காட்டும் சிட்டையை தறவிரக்கம் செய்து அச்சிட்டு கொடுப்பனவு செய்யும் வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**இணைய வழியில் விண்ணப்பிக்க முடியாத சந்தர்ப்பங்கள்**

- செல்லுபடியான கடவுச்சீட்டு காணாமல் போயுள்ள சந்தர்ப்பத்தில்
- 16 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது
- வேறு நாடொன்றில் பிறந்த பிள்ளையொன்று 22 வயதின் பின்னர் முதல் முறையாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது
- உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது

**கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கவேண்டிய ஏனைய ஆவணங்கள்**

சகல ஆவணங்களினதும் மூலப் பிரதிகளின் வருடியெடுக்கப்பட்ட (Scanned) மென் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. தேசிய அடையாள அட்டை
3. புகைப்படத்தின் சிட்டை (பிரதேச செயலகத்திற்கு வருகைத்தருவதற்கு முன்னர் புகைப்படத்தை எடுத்திருப்பின்)
4. செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் உயிர்மானத் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ள பக்கத்தின் பிரதி
5. திருமணத்தின் பின்னர் பெயரை மாற்றம் செய்வதாயின் திருமணச் சான்றிதழ்
6. தொழிலை உள்ளடக்குவதாயின் அதற்குரிய சேவைச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ்கள்
7. வெளிநாடு ஒன்றில் பிறந்த பிள்ளை எனின் குடியுரிமைச் சட்டத்தின் 5(2) பிரிவின் கீழ் அல்லது 11 ஆம பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழ்.
8. இரட்டைக் குடியுரிமையுள்ள ஒருவர் எனின், இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் மற்றும் குடியுரிமைப் பெற்றுள்ள மற்றைய நாட்டினது கடவுச்சீட்டின் உயிர்மானத் தரவுகள் அடங்கிய பக்கத்தின் பிரதி.

**மதகுருமாருக்கு**

சகல மதகுருமாருக்கு ஏற்புடைய அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள குருத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் வருடியெடுக்கப்பட்ட பிரதி